# சீசெல்சு, மொரிஷியஸ், மற்றும் இலங்கைக்கு பிரதமர் வருகை (10-14, மார்ச் 2015)

**மார்ச் 06, 2015**

2015 இல் தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக, பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 10 முதல் 14 ஆம் தேடி வரை சீசெல்சு, மொரிஷியஸ் & இலங்கைக்கு பயணம் செய்ய உள்ளார்.

11 மார்ச் அன்று, சீசெல்சில், பிரதமர் அவர்கள் நம் கடற்பகுதியில் உள்ள உறவுகளை வலுப்படுத்தி, நமது வளர்ச்சி ஒத்துழைப்பை அதிகரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் அலெக்சிஸ் மைக்கேல் அவர்களுடன் இருதரப்பு விவாதங்கள் நடத்த உள்ளார்.

11-12 மார்ச் தேதிகளில், மொரிஷியஸில், பிரதமர் இரு நாடுகளுக்கிடையிலான சிறப்பு மற்றும் தனிப்பட்ட உறவுகளை மேலும் மேம்படுத்த பிரதம மந்திரி சர் அனீரூத் ஜக்கனாத் அவர்களுடன் விரிவான கூட்டங்கள் நடத்த மற்றும் தேசிய தினக் கொண்டாட்டங்களில் பிரதம அதிதியாகவும் கலந்து கொள்ள உள்ளார்.

13 - 14, மார்ச் தேதிகளில் , பிரதம மந்திரி, இலங்கையில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களி சந்திப்பத்தோடு மற்றும் அரசியல் பன்முகத்தன்மையில் உள்ள பிற மூத்த தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்த உள்ளார்.

இந்த சந்திப்புகள் அரசியல் உயர்மட்டத்தில் நெருங்கிய தொடர்புகளை உருவாக்க மற்றும் பொதுவான நலன்கள் மற்றும் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் புரிதல் அதிகரிக்க வாய்ப்புகளை வழங்கும்.

நமது நட்புரீதியான கடல்சார் அண்டை நாடுகளுக்கு பிரதமரின் வருகை, இந்திய பெருங்கடல் பகுதியில் நமது உறவுகளை வலுப்படுத்த இந்தியாவின் ஆவலினை பிரதிபலிப்பு செய்யும்.

**புது தில்லி**

**மார்ச் 6, 2015**